**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 53/2023**

**வாதி தரப்பு சாட்சி–3 ராஜமாணிக்கம் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 14.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. யார் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் வாதிகள் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால், 1, 3 வாதிகள் சொல்லி தயார் செய்யப்பட்டது. என் சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வது தவறு என்றும், வாதிகள் சொன்னதன் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் சாட்சியத்தில் எனது வயது 46 என கண்டுள்ளது என்றால் சரிதான். நான் 1979 ம் வருடம் பிறந்தேனா என்றால் ஆமாம். 2ம் வாதி மாரியப்பன் தகப்பனார் பெயர் என்னவென்றால் காளியப்பன். வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்களில் 2ம் வாதியின் தகப்பனார் பெயர் காளியப்பன் என்றுதான் உள்ளதா என்றால் ஆமாம்.

2) காளியப்பனை எத்தனை வருடமாக தெரியும் என்றால், அவரை எனக்கு தெரியாது, எனக்கு விபரம் தெரியும் போதே அவர் இறந்துவிட்டார். எனது சாட்சிய வாக்குமூலத்தில் 1989ம் வருடம் காளியப்பன் இறந்துவிட்டதாக கூறியுள்ளேன் என்றால், வாதிகள் சொன்னதால் தெரியும், நான் பிறக்கும் போதே அவர் இறந்துவிட்டார். காளியப்பன் இடம் வாங்கிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என் சாட்சிய வாக்குமூலத்தில் 1989ல் காளியப்பன் இறந்த பின்னிட்டு வாதிகள் சுவாதீனத்தில் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில், அப்போது எனக்கு வயது 10

என்றால் சரிதான். நான் சிறுவயதாக இருந்ததால் வாதிகள் சுவாதீனத்தில் இருந்ததாக சொல்லும் விபரம் எனக்கு தெரியாது என்றும், வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) எனது ஊருக்கும், மாரியப்பன் ஊருக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் ½ கிமீ துாரம் இருக்கும். எனது கிராமத்தின் பெயர் வரவணை கிராமம், மாரியப்பன் வசிக்கும் கிராமத்தின் பெயர் பண்ணைப்பட்டி கிராமம் ஆகும். எனது சாட்சிய வாக்குமூலத்தில் எனது கிராமத்தின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல வரவணை கிராமத்தில் வசிக்காததால்தான் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்த வழக்குரையின் விபரம் தெரியுமா என்றால் தெரியும். என்ன விபரங்கள் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் வாதிகளான சுப்பிரமணி, நல்லம்மாள், மாரியப்பன் ஆகியோருக்கு பாதை பிரச்சினை என குறிப்பிட்டுள்ளனர். தாவா பி, சி அட்டவணை சொத்துக்களை 2ம் வாதியே குடும்ப மேலாளராக இருந்து அனுபவித்து வருவதாக வழக்குரை பத்தி 7ல் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

4) எனது சாட்சிய வாக்குமூலத்தில் 2ம் பத்தியில் மாரியப்பன் தகப்பனார் இறந்த பின்னிட்டு, 2ம் வாதியும் அவரது சகோதரியான 3ம் வாதியும் தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு தாவா சொத்துக்களை யார் சுவாதீனம் செய்து வருகின்றனர் என்ற விபரம் முழுமையாக தெரியாததால்தான் நான் முன்னுக்குப்பின் முரணாச சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காளியப்ப செட்டியார் யாரிடம் கிரையம் வாங்கினார் என்றால் முனியப்ப செட்டியாரிடம் வாங்கினார். எப்போது கிரையம் வாங்கினார் என்றால் அதுபற்றி தெரியாது. காளியப்ப செட்டியாரின் கிரைய ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், காளியப்ப செட்டியார் வேறு நபரிடம் கிரையம் வாங்கியுள்ளார் என்றும், எனக்கு விபரம் தெரியாததால்தான் பொய்யாக முனியப்ப

செட்டியார் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. காளியப்ப செட்டியர் எத்தனை இடங்களை கிரையம் வாங்கினார் என்றால், அந்த கிராமத்தில் 3 இடங்களை கிரையம் வாங்கியுள்ளார்.

5) அந்த இடங்களின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த 3 இடங்கள் சம்பந்தமாக இந்த வழக்கு நடக்கிறதா என்றால் இல்லை, ஒரு இடம்தான். அந்த ஒரு இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், சர்வே எண் 527/1, 527/2 ஆகும். மேற்படி சர்வே எண்ணில்தான் காளியப்ப செட்டியார் கிரையம் வாங்கினாரா என்றால் ஆமாம். எவ்வளவு இடம் கிரையம் வாங்கினார் என்றால், 2 சர்வே எண்களிலும் சேர்த்து 3 ஏக்கர் கிரையம் வாங்கினார். எனது நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் பண்ணைப்பட்டி கிராமம், சர்வே எண் 525/3 ஆகும். சர்வே எண் 525/3 எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் பூர்வீக சொத்தாகும். எத்தனை வருடங்களாக எங்களுக்கு பாத்தியம் என்றால், எங்களது முப்பாட்டன் காலத்தில் இருந்த நாங்கள் அனுபவித்து வருகிறோம். சர்வே எண்கள் 527/1, 527/2 ஐ காளியப்ப செட்டியார் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் முனியப்ப செட்டியாரிடம் இருந்து வாங்கினார்.

6) எனது நிலமான சர்வே எண் 525/3 ல் எவ்வளவு இடம் எனக்கு பாத்தியம் என்றால் 3 செண்ட் இடம் பாத்தியம். எனது நிலத்திற்கு எந்த திசையில் காளியப்ப செட்டியார் நிலம் உள்ளது என்றால் எனது நிலத்திற்கு தெற்குபுறம் உள்ளது. பிரதிவாதியின் இடம் எந்த திசையில் உள்ளது என்றால் எனது நிலத்திற்கு தெற்குபுறம்தான் உள்ளது. பிரதிவாதியின் நிலம் காளியப்ப செட்டியார் நிலத்திற்கு எந்த திசையில் உள்ளது என்றால் மேற்குபுறம் உள்ளது. பிரதிவாதியின் இடத்தை ஒட்டி தென்புறம் யார் இடம் உள்ளது என்றால் தங்கவேலு என்பவர் நிலம் உள்ளது. தங்கவேலு நிலத்தின் தென்புறம் யார் நிலம் உள்ளது என்றால் முனியப்ப செட்டியார் நிலம் உள்ளது. தங்கவேலு, முனியப்ப செட்டியார் நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

7) பிரதிவாதி கிரையம் வாங்கிய இடத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியவில்லை, முக்கால் ஏக்கர் நிலம் கிரையம் வாங்கினார். முக்கால் ஏக்கர் நிலம் எத்தனை இடத்தில் உள்ளது என்றால், ஒரே நிலமாக உள்ளது. பிரதிவாதியின் கிரைய ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. தாவா வண்டிப்பாதையாக நான் சொல்லியுள்ள இடத்தின் சர்வே எண், நீள, அகலம் தெரியுமா என்றால், சர்வே எண் 527 ல் அகலம் சுமார் 12 அடி, நீளம் 800 மீட்டர் இருக்கும். மேற்படி புள்ளி விபரங்களை வாதிகள் சொல்லிக் கொடுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, வழக்கமாக அந்த பாதையில்தான் சென்று வருகிறேன். நான் மேற்படி பாதையை அளந்து பார்த்தேனா என்றால் இல்லை, சுமாராக சொல்கிறேன். வண்டிப்பாதை என்பதை காட்ட வாதிகள் ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் இல்லை. பிரதிவாதியின் இடத்தில் நான் சொல்வது போல எந்த ஒரு வண்டிப்பாதை அமைப்பும் இல்லை என்றால் சரியல்ல, இருக்கிறது.

8) எனது சாட்சிய வாக்குமூலத்தில் 5 ம் பத்தியில் சொல்லியுள்ளவாறு யார் பிரச்சினை செய்தனர் என்றால் நல்லம்மாள் மேற்படி பாதையில் குழிபறித்து செல்லவிடாமல் தடுத்தார். அது சம்பந்தமாக வாதிகள் காவல்துறையில் புகார் கொடுத்தனர். மேற்படி பிரச்சினை குறித்து யார் என்னிடம் சொன்னது என்றால், நான் நேரடியாக பார்த்தேன். மேற்படி சம்பவம் எப்போது நடந்தது என்றால் 2023 ம் வருடம் நடந்தது, தேதி, மாதம் ஞாபகமில்லை. பிரதிவாதியை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, நான் அவர்களை நேரடியாக பார்த்ததில்லை. நான் நல்லம்மாளை நேரடியாக பார்க்காத நிலையில் அவர் தாவா வண்டிப்பாதை என குறிப்பிடப்படும் இடத்தில் குழிபறித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சம்பவத்தின் போது எனக்கு அவர்தான் நல்லம்மாள் என தெரியாது. பின்னிட்டு தெரிந்து கொண்டேன். எப்போது பிரதிவாதியை தெரிந்து கொண்டேன் என்றால், 2 ம் முறை குழிபறித்து பிரச்சினை செய்தபோது தெரிந்து கொண்டேன்.

9) 2ம் முறை எப்போது குழிபறித்தார்கள் என்ற தேதி, வருடம் தெரியுமா என்றால் தேதி தெரியவில்லை. உண்மையில் நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அதனால்தான் பிரதிவாதியை தெரியாமலே தெரிந்ததாக கூறுகிறேன் என்றும், தேதி, மாதம், வருடம் தெரியவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். நான் எனது பிரமாய வாக்குமூலத்தில் 6ம் பத்தியில் எதற்காக பல சர்வே எண்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால், மேற்படி நிலங்கள் மாரியப்பன் நிலத்திற்கு அருகில் உள்ள நிலங்கள் ஆகும். அவர்களும் மேற்படி வண்டிப்பாதையைத்தான் பயன்படுத்தி வருகின்றனர் என்பதற்காக சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல வண்டிப்பாதையை யாரும் பயன்படுத்தவில்லை, வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) அவ்வாறு உண்மையில் மேற்படி சர்வே எண்களில் உள்ள நபர்கள் வண்டிப்பாதையை பயன்படுத்தியிருந்தால் அவர்களும் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பார்கள் என்றும், அவ்வாறு யாரும் தாக்கல் செய்யவில்லை என்றால், அனைவரும் உறவினர்தான், வாதிகள் தாக்கல் செய்தால் போதும் என் நினைத்திருப்பார்கள். வாதிகள் மேற்படி சர்வே எண்களில் உள்ள நபர்களும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் மற்றும் உறவினர்கள் என்பதாலும், பிரதிவாதி வெளியூரைச் சேர்ந்த வேறு சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதால் அவரிடம் இருந்து நிலத்தை பறித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல, 1ம் வாதி வேறு சமுதாயத்தை சேர்ந்தவர். 1ம் வாதி சமுதாயத்தை வைத்துதான் பிரதிவாதியை நாங்கள் மிரட்டி வருகிறோம் என்றால் சரியல்ல, பிரதிவாதிதான் வாதிகளை மிரட்டி வருகிறார்.

11) பிரதிவாதி எந்த காலத்திலும் வண்டிப்பாதையாக சொல்லும் இடத்தில் குழி பறிக்கவில்லை என்றும், வாதிகளிடம் எந்த பிரச்சினையிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்கள் 527/1, 527/2 பிரதிவாதி

கிரையம் வாங்கிய இடம் என்றும், எனக்கு முழு விபரமும் தெரியாததால்தான் மேற்படி இடத்தை காளியப்ப செட்டியார் வாங்கியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் பாதை அமைப்பு சர்வே எண் 527/1 க்கு அருகில் உள்ள மாணிக்கம் மகன் சக்திஆறுமுகம் என்பவர் இடத்தில் உள்ளது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் சக்திஆறுமுகம் இடத்திற்கும், நல்லம்மாள் இடத்திற்கும் இடையில் பாதை செல்வதாக கூறுகிறார். நான் சொல்வது தவறு என்றும், நல்லம்மாள் இடத்தில் பாதை இல்லை என்றும், சக்திஆறுமுகம் இடத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் விபரம் மற்றும் சொத்து விபரங்கள் என்க்கு தெரியாது என்றால், முழுமையாக தெரியாது. வாதிகள் அழைத்ததன் பேரில் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**